[28th March 1969

Foodgrains Godown, Madurai.

* 267 *Q.*—THIRU M. AIYASWAMY : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the Government is aware of the fraud evolved recently at Government Foodgrains Godown of Madurai ?

(*b*) if so, the amount misappropriated ; and

(*c*) the action taken by the Government thereon ?

அரசினர் உணவு தானியக் கிடங்கு மதுரை.

திரு. எம். அய்யாசாமி: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) மதுரை அரசினர் உணவு தானியக் கிடங்கில் அண்மையில் மோசடி நடந்துள்ளதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், எவ்வளவு தொகை மோசடி செய்யப்பட்டிருக்கிறது?

(உ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம். பழங்காநத்தம் மத்திய சேமிப்பு கிடங்கில் மோசடி நடந்துள்ளது.

(இ) ரூபாய் 3 முதல் 4 லட்சம் வரை மோசடி செய்யப்பட்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(உ) கிடங்கு உதவியாளர் ஒருவரையும், இன்னும் சில வெளி நபர்களையும் போலீசார் கைது செய்துள்ளனர். அவர்கள் மேல் உள்ள வழக்கு புலன் விசாரணை முடியும் தருவாயில் இருக்கிறது. புலன் விசாரணை முடிந்ததும் அரசாங்க குற்ற வழக்கறிஞரின் ஆலோசனையைப் பெற்று ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும்.

திரு. எம். அய்யாசாமி: இதில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகச் கூறப்படுவது உண்மையா ? அப்படி யாரும் கைது செய்யப்பட்டார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது முற்றிலும் தவறான செய்தி. மதுரையிலே உலவுகிற வதந்தியை இந்த மாமன்றத்தில் உறுப்பினர்கள் சொல்கிறார்கள். அது முற்றிலும் உண்மைக்கு முரணானது. வெளியிலே விஷமத்தனமாக செய்யப்படுகிற பிரசாரத்தை பொறுப்பு வாய்ந்த உறுப்பினர் இந்த மன்றத்தில் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, as far as I know, two actions are under way. One is the action against the culprits who perpetrated the fraud. They are being proceeded against. There is a case registered against them. They are on bail now. The method in which the fraud was committed was that those persons collected the money from the various merchants to whom permits had been issued and, instead of paying the money into the treasury or the Reserve Bank, they created fake chalans as though money had been paid and they took delivery of the bags from the warehouse. Now one of the steps taken is that the merchants, in respect of whose permits this fraud was committed, have been asked to remit the amounts back into the Government. I am not objecting to the action taken in that direction. But what

28th March 1969]

I would like to say is that many of the merchants are very poor people and are unable to repay the money in one lump sum. Will the Government kindly consider the question of allowing them to pay back the amount due to the Government in easy instalments instead of requiring them to pay in one lump sum ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வியாபாரிகளிடமிருந்து 50 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் தரகர்களை விட்டு அவர்கள் ஸ்டேட் பாங்கில் சலானில் பணம் கட்டியதாக பொய் ரசீது கொண்டுபோய்க் கொடுத்து நெல் பெற்றிருப்பது. பணம் முதலாளி கொடுத்தனுப்பினாரா, தரகர் எடுத்துக்கொண்டாரா என்ற விவரம் இல்லை. உண்மையான குற்றவாளி முதலாளி அல்லது தரகராக இருக்கலாம். அங்கே பணியாற்றுகிறவர்கள் எல்லாம் உடந்தையாக இருக்கலாம். பணம் யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்று விசாரணையில் தெரிய வரும்போது பணம் திரும்பக் கொடுக்கும் வாய்ப்பும் வரும். அந்த நெல்லை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதற்கான தொகையை அவர்களிடம் வசூல் செய்வதில் தவறு இருக்க முடியாது என்று கருதுகிறேன். உதவியாளரிடம் இருந்து ரூபாய் 25 ஆயிரம் பெருமான பொருள்கள், நகைகள், டிரான்சிஸ்டர், அம்பாசிடர் கார் போன்றவைகள் எல்லாம் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

திரு. டி. சந்தோஷம்: வியாபாரிகளிடமிருந்து பணத்தைப் பெறுவது தவறில்லை. திரும்பச் செலுத்தும்படி கேட்கும்போது உடனடியாக மொத்தமாகச் செலுத்த வசதியில்லாத நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் எளிதான தவணை முறையில் செலுத்துவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதில் கருணை காட்ட இயலாது. மோசடியில் ஈடுபட்டவர்களிடம் தவணை முறையில் வசூல் செய்வது என்றால் பணம் வசூல் செய்ய முடியாத நிலைமை ஏற்படலாம். சரக்கு அனுப்புகிற பொழுது அவர்களுக்கும் இந்த விவரம் தெரியாமல் நடந்திருக்கும் என்று சொல்ல முடியாது. இது கூட்டு சதியாக நடந்திருப்பதால், எல்லோர் மீதும் மொத்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கிறது.

Dealers in Sugar in Chinnamanur

* 268 *Q*.—Thiru R. KRISHNASWAMY NAIDU (on behalf of Thiru N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether about the 22nd of February 1969, the Sub-Collector, Periyakulam, suddenly and without any previous notice cancelled the licences of all the authorised dealers of sugar in Chinnamanur, Madurai district, and ordered them to surrender the entire stock with them in 48 hours ;

(*b*) whether the dealers obtained a stay-order from the District Revenue Officer ;

(*c*) whether even after the said stay-order was brought to his notice, the Sub-Collector threatened and forcibly seized the stock of sugar in the possession of the dealers ; and

(*d*) if so, the details thereof ;